Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி - 02 | 17-06-2003 | செவ்வாய்க்கிழமை | ஓசை 119




# படையினரின் அடாவடிகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்த

# யாழ். வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் திட்டம்!

## கண்டன அறிக்கையில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடாநாட்டில் சிறிலங்காப் படையினரின் அதிகரித்துவரும் அடாவடித்தனங்களைக் கண்டித்து வெகுசனப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக யாழ். மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.நேற்று முன்தினம் இரவு வெளியிடப்பட்ட கண்டன அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ். குடாநாட்டில் வலிகாமம் பகுதியில் அரசியல் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போராளிகள் மீதும், அலுவலகம் மீதும் நடத்தப்பட்ட படையினரின் அத்துமீறல்களைக் கண்டித்து வெகுசனப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வழக்கம்பரை, சுழிபுரம் வீதியில் அரசியல் பணிப் போராளி தமிழனைச் சோதனையிட முயன்ற சம்பவத்திற்கும், சண்டிலிப்பாயில் விடுதலைப்புலிகளின் முகாம்மீது நடத்தப்பட்ட கைக்குண்டு வீச்சிற்கும் யாழ். மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

## சுழிபுரத்தில் புலிகளின் முகாங்களை சுற்றிவளைத்த படையினர்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்காப் படையினருக்குமிடையில் யாழ். சுழிபுரம் பகுதியில் ஏற்பட்ட முறுகல் நிலை நீடித்து வருகிறது.

சுழிபுரத்திலுள்ள விடுதலைப் புலிகளின் ஆண் மற்றும் பெண் போராளிகளின் முகாங்கள் நேற்று முன்தினம் அதிகாலை 6.30 மணியளவில் சிறிலங்காக் கடற்படையினராலும் பொலிசாராலும் சுற்றி வளைக்கப்பட்டு ஆண் போராளிகளின் முகாம் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டு முகாமைச் சோதனையிடுவதற்கு கடற்படையினரும் பொலிசாரும் முயன்றனர். இதற்கு போராளிகள் மறுப்புத் தெரிவித்துவிட்டு யுத்த நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினர் வந்து சோதனை செய்ய ஆட்சேபனை இல்லை என்றும் கடற்படையினரும் பொலிசாரும் யுத்த நிறுத்த மீறல் நடவடிக்கையிலீடுபட்டுவருவதாகவும் தமது முகாமிற்குள் அத்துமீறி நுழைவதற்கு முயற்சிப்பதாகவும் யுத்த

(08ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வன்முறையில் சமாதான விரோதிகளே ஈடுபடுகின்றனர்!

### புலிகள் – படையினர் சந்திப்பில் புலிகள் வலியுறுத்து

படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களுக்கும், புலிகளுக்கும் இடையே எதுவித தொடர்பும் இல்லை. சமாதான விரோத சக்திகளே இச்செயலில் ஈடுபடுகின்றனர் என நேற்று வவுணதீவில் நடைபெற்ற புலிகள் - படையினர் சந்திப்பில் புலிகளால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும் சிறிலங்கா படையினருக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது. பிற்பகல் 2.00 மணிக்கு யுத்த சூனியப் பிரதேசமான வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மாவட்டத் தலைவர் தலைமையில் இச்சந்திப்பு இடம் பெற்றது.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் தற்போது இடம்பெற்றுவரும் புலிகள்-பொலிசார் பரஸ்பர கைது விவகாரமும், மாற்றுத் தமிழ்க் குழுக்கள் மீது மேற்கொள்ளப் பட்டுவரும் தாக்குதல்கள் தொடர்பாகவும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது. இச்சந்திப்புக் குறித்து சிறப்புத் தளபதி றமேஸ் கூறுகை

(08ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளை முன்னெடுக்க நோர்வே அரசு தீவிர முயற்சி!

(லண்டன்)

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை நோர்வே அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இரு தரப்பிற்குமிடையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைத் தணிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக நோர்வே அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுத் தூதரகங்களில் பொருளாதாரச் சபைகள்

வெளிநாடுகளிலுள்ள சிறிலங்காத் தூதரகங்களில் பொருளாதாரச் சபைகளை உருவாக்குமாறு சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ சகல தூதரகங்களையும் கேட்டுள்ளார்.

சிறிலங்காவின் பொருளாதார வளர்ச்சிக்கு காத்திரமான முறையில் உதவக்கூடிய வகையில் இச்சபைகள் உருவாக்கப்பட வேண்டும் என அவர் கூறியுள்ளார். இச்சபைகள் தூதுவர்களின் நேரடிக் கவனிப்பில் இருக்க வேண்டும் எனவும், வர்த்த

(08ஆம் பக்கம் பார்க்க)

## மந்திகைப் பகுதியில் படையினர் புதிய சோதனைச்சாவடி அமைப்பு

வடமராட்சி மந்திகைக்கும், மாலுசந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்று சிறிலங்காப் படையினர் புதிய சோதனைச் சாவடியொன்றை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மாலை 5.00 மணிக்கு கவச வாகனங்கள் சகிதம் வந்த படையினர் இந்த நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

## இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டவரின் குடும்பத்தினர் படையினரால் விசாரணை

### மகனைக் கட்டித் தூக்கிச் சித்திரவதை

(வடமராட்சி)

வடமராட்சி - திக்கம் பகுதியில் வைத்து கடந்த 11ஆம் திகதி இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டவரின் குடும்பத்தினர் மற்றும் அயலவர் ஒருவர் சிறிலங்காப் படையினரால் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் குறிப்பிட்டவரின் வீட்டிற்குச் சென்ற படையினர் அவரது மனைவி, மகன், மகள் மற்றும் அயல் வீட்டுக்காரர் ஒருவரையும் முகாமிற்கு அழைத்துச் சென்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை தீவிர விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

இவ்விசார்ணையின் போது கடத்தப்பட்டவரின் மகனான குலசிங்கம் விஜயகுமார் என்பவரைக் கட்

(08ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாவில் மீள்குடியேறல்

## புலிகள் – படை அதிகாரிகள் நேற்றுச் சந்தித்துப் பேச்சு!

வவுனியாவில் அதியுயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று மாலை இடம் பெற்றுள்ளது. வவுனியா அரச செயலகத்தில் நடைபெற்ற இந்தக்கூட்டத்தில் வவுனியா மாவட்ட அரச அதிபர் மற்றும் அதிகாரிகளும் சிறிலங்காப்படை அதிகாரிகளும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்டத்துணை அரசியலதுறை துறைப் பொறுப்பாளர் செங்கதிர் மற்றும் அரவிந்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவினர் தொடர்ந்தும் விசாரணை

புலிகளின் கப்பல் கடந்த சனிக்கிழமை சிறிலங்காக் கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி வருகின்றது.

கடற்கொந்தளிப்பு இருப்பினும் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு படகு மூலம் செல்வதற்கு கண்காணிப்புக் குழுவினர் முயன்று வருகின்றனர். இச்சம்பவம் குறித்து விசாரணைகள் முடிவடையாத நிலையில் எத்தகைய கருத்தினையும் கூற முடியாதென கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் திருமதி அக்னஸ் கூறியுள்ளார்.

## இடைக்கால நிர்வாக அமைப்பிற்கான அரசின் பிரேரணை புலிகளிடம் சமர்ப்பிக்கப்படும்

### அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவிப்பு

வடக்குக் கிழக்கிற்கான தகுந்த இடைக்கால நிர்வாக அமைப்பிற்கான அரசாங்கத்தின் பிரேரணை ஒன்று விடுதலைப்புலிகளிடம் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் அபிப்பிராயத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் இடைக்கால நிர்வாக அமைப்புத் தொடர்பான இறுதித்தீர்மானம் எடுக்கப்படும் என்று நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் தெரிவித்தார்.

வடக்குக்கிழக்கில் புனர்வாழ்விற்கான தற்போதைய சிரான்குழு செயல் ரீதியான திட்டமல்ல என்று அமைச்சர் தெரிவித்தார். இந்தத்திட்டத்துக்குப்பதிலாக புதிய வழிமுறை ஒன்றை வகுப்பது அவசியம்.

மேலும் மாகாணம் தொடர்பாக இரண்டு ஆணையாளர்களை நியமிக்க அரசாங்கம் பிரேரித்திருக்கிறது. அத்துடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் அபிவிருத்திக் குழு ஒன்றை அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கள் நடத்துவது அவசியம் என்று அமைச்சர் தெரிவித்தி

(08ஆம் பக்கம் பார்க்க)

**வரிவிளம்பரம்**

**விற்பனைக்குண்டு**

தரமான புழுக்கொடியல் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்புகட்கு: வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம் (வெண்புறா நிறுவனத்திற்கு முன்பாக) கண்டிவீதி, கிளிநொச்சி. (சி-8159)

**விவசாயிகளே!**

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை,சவுக்கு மற்றும் பல தரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3275)


## வடமராட்சி கிழக்கில்
# மாவீரர் துயிலுமில்லத்திற்கு பாதை அமைக்கப்பட்டது

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் புதிதாக அமைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லத்திற்குப் பாதை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இப்பாதையை வேம்படி வாழ் மக்களும், வேம்படி முத்தமிழ் சனசமூக நிலையமும், வேம்படி ஓடுமீன் விளையாட்டுக் கழகமும் இணைந்து கடந்த வெள்ளியன்று அமைத்தனர்.

வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தீபன் அவர்களின் நெறிப்படுத்தலில் துயிலும் இல்லத்திற்கான பாதை எலிசபெத் வீதியிலிருந்து 75 மீற்றர் தூரம் உள்ளே அமைத்துள்ளனர். இது துயிலும் இல்ல கட்டுமான வேலைக்குப் பொருட்களை இலகுவாக உள்ளே கொண்டு செல்வதற்கு இலகுவாக இருப்பதுடன் துயிலும் இல்லத்திற்கு கட்டுமான வேலையின் முதல் வேலையாகவுமுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (11)

# முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி செயற்பாட்டு விஸ்தரிப்புக் கூட்டங்கள்

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையங்களை பிரதேச ரீதியாகவும், கல்வி வலய ரீதியாகவும் விரிவுபடுத்தும் வகையில் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்திச் செயற்பாட்டு விஸ்தரிப்புக் கூட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த 12ஆம் திகதியன்று மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் முசலி உதவி அரச அதிபர் பிரிவிலும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் கல்வித் திணைக்களமும் இணைந்து மேற்படி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள முன்பள்ளிகள் யாவும் ஒருங்கிணைக்கப்பெற்று மேற்படி கூட்டம் இடம்பெற்றது. அந்தந்தப் பிரதேச முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய உதவிக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் மன்னார் மாவட்டத்திற்கான மேம்பாட்டு நிலையம் அமைக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கில் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையங்களை பிரதேச, வலய ரீதியாக உருவாக்குதல், செயற்பெற வைத்தல், முன்பள்ளிக் கல்வியின் முக்கியத்தும் போன்றவை குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத் திட்ட இணைப்பாளர் கா. கணேசலிங்கம், வட-கிழக்கு முன்பள்ளிப் பருவ அபிவிருத் திப் பிரிவு இணைப்பாளர் இ. ரேணுகா ஆகியோர் கலந்து திட்ட முக்கியத்துவம் குறித்து விளக்க மளித்தனர்.

இதேபோன்று 13ஆம் திகதியன்று மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர மண்டபத்திலும், அன்றைய தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிக்குடி ம.வி.யிலும், 14ஆம் திகதி அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று ம.வி.யிலும் மேற்படி கூட்டங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ, லோ)

## - சண்டிலிப்பாயிலுள்ள -
# அரசியல்துறை அலுவலகம் மீது இரு தினங்கள் கைக்குண்டு வீச்சு

சண்டிலிப்பாயிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகம் மீது அடுத்தடுத்து இரு தினங்கள் இரவு வேளைகளில் கைக்குண்டு வீச்சு இடம்பெற்றுள்ளது. கடந்த சனிக்கிழமை இரவும், ஞாயிற்றுக் கிழமை இரவும் இவ்வாறு கைக்குண்டுகள் வீசப்பட்டன.

சனியன்று இரவு வீசப்பட்ட கைக்குண்டு வெடிக்கவில்லை. நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை வீசப்பட்ட குண்டு வெடித்தபோதும் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

# இலங்கையில் சர்வதேச பங்களிப்பு அதிகரிப்புக் குறித்து இந்தியா அதிருப்தி

## அமைச்சர் பீரிஸிடம் தெரிவிப்பு

(டெல்லி)

இலங்கை விவகாரத்தில் சர்வதேச நாடுகளின் பங்களிப்பு அதிகரிப்பது குறித்து இந்தியா அதிருப்தியடைந்துள்ளதாக தெரிய வந்துள்ளது. இது தொடர்பாக அண்மையில் இந்தியாவிற்குச் சென்ற அமைச்சர் ஜீ. எல். பீரிஸிடம் நேரடியாகவே இந்திய அரசாங்கம் தெரிவித்ததாகவும் தெரிய வருகின்றது.

இலங்கை விவகாரத்தில் சர்வதேச நாடுகளின் பங்களிப்பு அதிகரித்து வருகின்றது. அத்துடன் டோக்கியோ மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட சில கருத்துக்களும் இந்தியாவிற்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

டோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் இம்மாநாடு தொடர்பாகவும், சமாதானப் பேச்சுவார்த்தைகளின் தற்போதைய நிலை குறித்தும் விளக்க டோக்கியோவில் இருந்து நேரடியாக இந்தியா சென்றிருந்தமை தெரிந்ததே.

இதன்போது இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய், எதிர்க் கட்சித் தலைவி சோனியா காந்தி, வெளிவிகார அமைச்சா ஜஸ்வந் சிங்கா ஆகியோரைச் சந்தித்தார்.

அத்துடன் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சன்வன்சி பால், பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர்களையும் சந்தித்திருந்தார். இச்சந்திப்பின்போதே இவ்வாறு அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 20 நீரிறைக்கும் இயந்திரங்கள் சுழற்சி முறைக் கடனில் வழங்கல்

கிளி. மாவட்ட புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் வன்னி அபிவிருத்தித் திட்டம் கெயர் நிறுவனமூடாக 20 நீர் இறைக்கும் இயந்திரங்கள் சுழற்சி முறைக் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி கிளிநொச்சி, முழங்காவில் பிரதேசத்தில் பூநகரி முழங்காவில் அபிவிருத்தி நிறுவனத்தினூடாக கெயர் நிறுவனத்தினால் 20 விவசாயிகளுக்கு தலா ஒரு நீர் இறைக்கும் இயந்திரம், அதற்குரிய குழாய் என்பன அடங்கலாக 50000 ரூபா பெறுமதியான பொருட்களை சுழற்சி முறைக் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

## விளையாட்டு விழா

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் சுதாங்கனி முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுப் போட்டி நடைபெறவுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் கிளி/முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய ஒழுங்கமைவில் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனத்தால் நடாத்தப்படும் சுதாங்கனி முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா இன்று பி.ப. 2.00 மணிக்கு கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. (12)


## புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய
# வருடாந்த பொங்கல் உற்சவம்



வவுனியா வடக்கு புதூர் சிறி நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் வழமைபோல் 23-06-2003ஆம் திகதி நடைபெறும் என்பதை ஆலய பரிபாலன சபையினர் அடியார்களுக்கு அறியத்தருகின்றனர்.

மேற்படி புதூர் நாகதம்பிரான் உற்சவகால நிகழ்விற்கு வியாபார நிலையம் அமைப்பவர்கள் 19-06-2003 தொடக்கம் 21-06-2003 ஆம் திகதி வரை ஆலய முன்றலில் பரிபாலன சபையுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யும்படி ஆலய பரிபாலன சபையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

**தி.கிருஷ்ணகுமார்,**
ஆலய பரிபாலன சபை.
புதூர், புளியங்குளம், வவுனியா.

(சி-8168)


# மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகள் நேற்று வவுனியாவில் ஆரம்பம்

(வவுனியா)

வடக்கு-கிழக்கு மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் பெண்கள் பிரிவிற்கான பெரு விளையாட்டுப் போட்டி நேற்று வவுனியாவில் ஆரம்பமானது.

வவுனியா நகரசபை மைதானத்தில் வடக்கு-கிழக்கு மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் அருணகிரிராஜா தலைமையில் இப்போட்டி நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் 15 வயதின் கீழ் பெண்கள் வலைப்பந்தாட்டம் உடுவில் பெண்கள் கல்லூரி பதவிலிரக் பெண்கள் கல்லூரி, மன்னார் ஆண்டாங்குளம் ஆர்.சீ.ரீ.எம்.எஸ், அம்பாறை பதவலகல்ல மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளும், பதினேழு வயது பெண்கள் பிரிவில் யாழ். மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, அம்பாறை டி.எஸ்.சேனநாயக்கா மகாவித்தியாலயம், மட்டக்களப்பு கல்லடி முகத்துவாரம் மகளிர் மகாவித்தியாலயம், யாழ் வட. இந்து மகளிர் கல்லூரி ஆகியன அரை இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளன. பத்தொன்பது வயது பெண்கள் பிரிவில் யாழ். சண்டிலிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, மட்டக்களப்பு கல்லடி முகத்துவாரம் மகளிர் மகாவித்தியாலயம், யாழ். யூனியம் கல்லூரி மன்னார் சென். யூனியஸ் கல்லூரி ஆகியனவும் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையேயான அரையிறுதிப் போட்டிகள் இன்று நரக சபை மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதேவேளை, பெண்கள் பிரிவிற்கான கரப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளிலும்; கபடிப் போட்டி 20ஆம், 21ஆம் திகதிகளிலும், எல்லேப் போட்டி 19ஆம், 20ஆம் திகதிகளிலும் வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று வவுனியாவில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் பல சிரமங்களின் மத்தியிலும் பங்குபற்றுவதற்காக வருகை தந்த கிளி. மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகள் பங்குபற்ற முடியாமல் போய்விட்டன.

கிளி.கண்டாவளை ம.வி, கிளி. அக்கராயன் ம.வி ஆகிய பாடசாலைகளின் 15 வயதின் கீழ் பெண்கள் பிரிவிற்கான வலைப்பந்தாட்ட அணியினர் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் அடையாள அட்டைகளையும், பிறப்புச் சான்றிதழ்களை எடுத்து வராமையினால் அவர்கள் போட்டியில் இருந்து நீக்கப்பட்டனர். (10)

# பயிற்சிகள் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் முறைசாராக் கல்விப் பிரிவினால் யுனிசெவ் நிதியுதவியுடன் கணினிப் பயிற்சி, தட்டச்சு, சிகையலங்காரமும் ஒப்பனையும், பன்னை வேலை போன்ற பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி பயிற்சி நெறிகள் கடந்த 10ஆம் திகதி முதல் கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் யுனிசெவ் நிதியுதவியுடன் அமைக்கப்பெற்ற பயிற்சி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. (பா)


தமிழீழ விளையாட்டு ஒருங்கிணைப்புப் குழுவின் ஆதரவுடன்

**இரணைப்பாலை சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம்**

மின் ஒளியில் நடாத்தும்

# மாபெரும் விளையாட்டுப் போட்டி - 2003

மேற்படி விளையாட்டுக் கழகம் வருடாந்தம் நடாத்தி வரும் லெப்ரினன் செந்தூரன் ஞாபகார்த்த விளையாட்டு விழாவை நடாத்துவதற்காக தமிழீழ விடுதலைப்புலிகளின் பூரண கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**போட்டிகள்:**

01. உதைபந்தாட்டம் (11பேர் கொண்டது) இரு அணிகள் கலந்து கொள்ளலாம். கட்டணம் - 500 ரூபா.
02. து.வண்டி ஓட்டம் (18,44 பல்லுடைய வீல்) 50 மைல் கட்டணம் 300 ரூபா. (ரேசர் குடம் விலக்கப்பட்டுள்ளது)
03. மரதன் ஓட்டம் 10 மைல் கட்டணம் 150 ரூபா.
04. கயிறு இழுவை (07 பேர் கொண்டது) கட்டணம் 300 ரூபா.
05. மைதான நிகழ்வுகள் இருபாலாரும் கலந்து கொள்ளலாம். சகல நிகழ்சியும் மின் ஒளியில் நடைபெறும். (அ) 100 மீற்றர், (ஆ) 200 மீற்றர், (இ) 400 மீற்றர், (ஈ) 800 மீற்றர், (உ) 1500 மீற்றர் ஓட்டங்கள் கட்டணம் 50 ரூபா.
06. 4x400 மீற்றர் அஞ்சல் ஓட்டம் கட்டணம் 100 ரூபா.

குறிப்பு : சகல போட்டியாளர்களும் கழகங்களின் ஊடாகக் கலந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு விளையாட்டுக்கும் தனித்தனியாக புள்ளிகள் வழங்கப்பட்டு முதல் நிலைக் கழகங்கள் தெரிவு செய்து கௌரவிக்கப்படும். இரண்டாம் மூன்றாம் இலக்கப் போட்டிகள் தவிர்ந்த ஏனைய போட்டிகள் அனைத்தும் இரணைப்பாலை சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழக விளையாட்டு மைதானத்திலேயே நடைபெறும்.

கட்டணம் அற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும், விண்ணப்ப முடிவுத் திகதி 22.06.2003 பகல் 12 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இடம்:**

வன்னி (கரீஸ்) ஒளி, ஒலிக் கலையகம், பரந்தன் சாலை, புதுக்குடியிருப்பு.
தமிழீழ விளையாட்டு ஒருங்கிணைப்புக் குழுவின் வன்னி மாவட்டச் செயலகம்.
பொது விளையாட்டு மைதானம், கிளிநொச்சி.

**சென் அன்ரனீஸ் வி.க.,**
**இரணைப்பாலை,**
**புதுக்குடியிருப்பு.**

(3235)


# சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு பளையில் சிரமதானப்பணி

(வடமராட்சி கிழக்கு)

சூழல்பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு பளைப்பகுதியில் கடந்த சனிக்கிழமை சிரமதானப்பணிகள் இடம்பெற்றன.

பளைவர்த்தகர்கள், பாடசாலை மாணவர்கள், போராளிகள், பொது மக்கள் எனப் பல நூற்றுக்கணக்கானோர் இணைந்து பளை வைத்தியசாலைப் பகுதி மற்றும் ஆனையிறவு தீச்சுவாலை வெற்றிவிழா கொண்டாட்டம் இடம் பெற்ற இடமான முல்லையடி ஆகிய பகுதிகளில் காணப்பட்ட 'சொப்பிங்பை' மற்றும் குப்பைகள், தகரம் போன்ற பொருட்களை எடுத்து அகற்றி அப்பகுதியினை துப்புரவு செய்தனர். இச் சிரமதானப்பணி பளைப்பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் வின்சன் அவர்களின் ஏற்பாட்டில் இடம் பெற்றது. (11)

# ஈராக்கிற்குப் படைகளை அனுப்புவதில் இந்திய அரசாங்கம் பின்னடிப்பு!

## -கருத்தொருமைக்காகப் பிரதமர் காத்திருப்பாம்

(புதுடில்லி)

**கருத்தொருமை ஏற்பட்ட பின்னரே ஈராக்கிற்கு இந்தியப் படையினரை அனுப்பிவைப்பது குறித்து இறுதிமுடிவு எடுக்கப்படும் என எதிர்க்கட்சித்தலைவர் சோனியாகாந்தியிடம் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.**

ஈராக்கிற்கு இந்திய இராணுவத்தை அனுப்புமாறு அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகள் கோரியுள்ளன.

இது தொடர்பாகப் பிரதமர் வாஜ்பாய் எதிர்க்கட்சித் தலைவர் சோனியாகாந்தியும் சந்தித்துப் பேசியுள்ளனர்.

சுமார் 70 நிமிடம் நடைபெற்ற இச் சந்திப்பில் அரச தரப்பி லும் எதிர்க்கட்சித்தரப்பிலும் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போது இந்திய இராணுவத்தை ஈராக்கிற்கு அனுப்புவதாயின் ஐக்கிய நாடுகள் அமைப்பின் தலைமையின் கீழேயே அனுப்பப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சோனியாகாந்தி வலியுறுத்தியுள்ளார். அமெரிக்காவின் விருப்பப்படி படையினரை அனுப் பக்கூடாது என சோனியாகாந்தி ஏற்கனவே வாஜ்பாய்க்குக் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



பாக்தாத்தில் சோதனைச் சாவடியில் கண்டெடுக்கப்பட்ட ஈராக்கியரின் AK.47 ரக துப்பாக்கியின் இலக்கத்தைப் பரிசோதிக்கும் அமெரிக்கப்படையினர்

# சனாதிபதி பதவி விலகினாலே யுத்தநிறுத்தம் சாத்தியம்

## -லைபீரிய கிளர்ச்சியாளர் அறிவிப்பு

லைபீரியாவில் சனாதிபதி தனது பதவியிலிருந்து விலகும் வரை யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதில்லையென பிரதான கிளர்ச்சிக் குழு தெரிவித்துள்ளது.

இங்கு கடந்த 14 வருடங்களாக தொடர்ச்சியாக நடைபெறுகின்ற கொடிய யுத்தத் திற்கு முடிவு காண ஆரம்பிக்கப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் இதனால் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் தாங்கள் கைச்சாத்திடுவதற்கு முன்னால் சனாதிபதி பதவியிலிருந்து விலக வேண்டும் என திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளதாக கிளர்ச்சிக்குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேல்-பலஸ்தீன தரப்புக்கள் மோதலைத் தவிர்க்கப் பிரயத்தனம்

## வடக்குக் காஸாவிலிருந்து படை விலக இணக்கம்

இஸ்ரேலும் பலஸ்தீனமும் நேற்று முன்தினம் தொடக்கம் மோதல்களைத் தவிர்க்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன.

இஸ்லாமிய தீவிரவாதிகளின் தாக்குதலாலும் இஸ்ரேலிய இராணுவத்தினரின் தாக்குதலாலும் கடந்த வாரம் 50க்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் இருதரப்பும் ஈடுபட்டுள்ளது. இதே வேளை இருதரப்பும் மீண்டும் மோதல்களை மேற்கொண்டால் அமெரிக்கா தலைமையிலான சமாதானப்பாதைத் திட்டம் தோல்வியடையும்.

யூன் 04ம்திகதி ஜோர்தானில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் யூத குடியேற்றவாசிகள் கிழக்குக் கரையில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும் எனக் கேட்கப்பட்டிருந்தது. ஆனால் அது இடம்பெறவில்லை எனக் கண்காணிப்புக்குழு கூறுகின்றது.

மோதல்களால் அங்கு ஏற்படக்கூடிய அனர்த்தங்களைத் தடுப்பதற்கு அமெரிக்காவும் எகிப்தும் தூதுவர்களை அங்கு அனுப்பிவைத்துள்ளது.

நேற்று முன்தினம் எடுக்கப்பட்ட முடிவுகளின் படி காஸாவின் வடபுலத்தில் இருந்து இஸ்ரேலியப் படையினர் வெளியேறுவது என்றும் பலஸ்தீன அதிகாரசபை பெத்தலகேமில் இருப்போரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



கியூப விடுதலைப் போராளி சேகுவேராவின் 75வது பிறந்த தினத்தை நினைவு கூர்ந்து அவரது படத்தை ஏந்தி நிற்கும் கியூபா சிறுவன்.

# பல்கலை மாணவர் எழுச்சியைத் தடுக்க தெஹ்ரானில் குண்டுத் தாக்குதல்!

## -இழப்புக் குறித்து தகவலில்லை

(தெஹ்ரான்)

ஈரானில் சனநாயகத்துக்காகப் போராடும் தெஹ்ரான் பல்கலைக் கழகத்தில் குண்டுத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளது.

ஆறு நாட்களாகத் தொடரும் பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தைத் தடுத்து நிறுத்தும் முயற்சி இது என்று கருதப்படுகின்றது.

மாணவர்களுடன் ஆர்ப்பாட்டத்தில் இணைந்து கொள்வதற்கு ஆயிரக்கணக்கானவர்கள் காத்திருந்தவேளையில் இக்குண்டுத் தாக்குதலும் துப்பாக்கித் தாக்குதலும் நடைபெற்றுள்ளது.

ஈரானில் பழமை தேடும் மதவாதிகள் மீதும் அரசு மீதும் மாணவர்களின் கோபம் திரும்பியுள்ளதாகக் கூறப்படுகின்றது. இதேவேளை சனநாயகத்துக்காகப் போராடும் மாணவர்களின் முயற்சியை அமெரிக்க சனாதிபதி புஷ் பாராட்டியுள்ளார்.

# அசாமில் பெரு வெள்ளம்; 3 இலட்சம் பேர் நிர்க்கதி!

(புதுடில்லி)

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக் காரணமாக மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

குறிப்பாக அசாம் மாநிலத்தில் பாராக் நதியும் அதன் கிளை நதிகளும் பெருக்கெடுத்துப் பாய்வதனால் அந்த மாவட்டத்தின் நிலைமை மோசமடைந் திருப்பதாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த நதி அமைந்துள்ள மாவட்டத்தில் மாத்திரம் சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

# காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க நாம் தயார்; - ஆனால் இந்திய எதிர்பார்க்கைக்கு மாறானது!

## பாகிஸ்தான் சனாதிபதி முஷாரவ்

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்குப் பாகிஸ்தான் தயாராக இருப்பதாகப் பாகிஸ்தான் சனாதிபதி முஷாரவ் தெரிவித்துள்ளார்.

ஆனால் இப் பிரச்சினைக்கான தீர்வு இந்தியா எதிர்பார்க்கும் ஒரு தீர்வாக இருக்கமாட்டாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஆசியப் பிராந்தியத்தில் அணு வல்லமை பெற்ற இவ் விரண்டு நாடுகளும் கடந்த இரண்டு மாதங்களாக முறுகல் நிலையை எட்டியுள்ளன.


இரு நாடுகளுக்கும் இடையிலான மூன்று போர்களில் இரண்டு போர்களுக்குக் காரணமாகக் காஷ்மீர் பிரச்சினை அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் சமாதானத்திற்கான கதவுகள் திறந்தே இருக்கின்றது எனக் கூறியுள்ளார். ஆனாலும் இந்தியாவின் நம்பிக்கைத் தன்மை திருப்திகரமானது அல்ல என பாகிஸ்தான் சனாதிபதி முஷாரவ் தெரிவித்துள்ளார்.

என்னால் இந்தியாவை நூறுவீதம் நம்பமுடியவில்லை எனத் தெரிவிக்கும் முஷாரவ் பேச்சுவார்த்தைகள் இவ் விடயம் தொடர்பாகப் புனிதப்படுத்தப்பட வேண்டும் எனக் கேட்டுள்ளார்.

இந்தியாவின் செயற்பாடு வேகமாகவில்லை எனவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

எல்லா விடயங்களுக்குமான பதில்களைக் காலம் சொல்லும் என்றும் முஷாரவ் ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனத்துக்குத் தெரிவித்துள்ளார்.



சீனாவின் குபே மாகாணத்திலுள்ள உலகின் மிகப்பெரிய நீர்த்தேக்கமான "த்ரீ கோஜஸில்" நடைபெறும் படகோட்டும் போட்டி

# 'பாத்தீனியம்'

# ஆபத்தை உணருங்கள்!

மனிதனுக்கும், விலங்குகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதுடன், இயற்கைச் சமநிலையையே மாற்றி அமைத்து விடக்கூடிய ஆக்கிரமிப்புக் களையான பாத்தீனியம் எனும் தாவரம் கிளி.மாவட்டத்தில் அக்கராயன் பகுதியில் இனம் காணப்பட்டுள்ளது.

அக்கராயன் விவசாயப் போதனாசிரியர் பிரிவிற்குட்பட்ட அக்கராயன் அரசினர் வைத்தியசாலை, அக்கராயன் ப.நோ.கூ. சங்க வளாகத்திலேயே இக்களை இனம் காணப்பட்டுள்ளது.

இக்களை இப்பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இனம் காணப்பட்டு அழிப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அவை தற்போது மீண்டும் காணப்படுவதை அவதானிக்க முடிந்துள்ளது.

இந்நிலையில், மீண்டும் காணப்படும் இக்களையை அழிப்பதற்கு விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையுடன் அப்பகுதி போதனாசிரியர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். இந்நடவடிக்கை 18-06-2003 நாளை நடைபெறவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இனம் காணப்பட்ட இத்தாவரம் உரிய முறையில் அழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையினால் மீண்டும் இப்பிரதேசம் முழுவதும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனை அழிப்பது அனைவரினதும் கடமையாக மாறியுள்ள நிலையில் அதன் தோற்றமும் ஏற்படப்போகும் தீமைகளைப் பற்றியும் அறிந்து கொள்வது முக்கியமானது.

பாத்தீனியம் (**Parthenium**) என்னும் பெயருடைய இத்தாவரம் இலங்கையில் விவசாய நிலங்களிலும் தரிசு நிலங்களிலும் மிக வேகமாகப் பரவி வருகின்றது. நாம் செய்கை பண்ணும் பயிர்களுடன் மாத்திரமல்லாது இயற்கையாக வளரும் ஏனைய தாவரங்களுடனும் போட்டியிட்டு வளருகின்றது. இதனால் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் பெரும் சவாலாக விளங்குவதாகப் பல நாடுகளில் இனங் காணப்பட்டுள்ளது. பாத்தீனியம் சூழலுக்கு ஏற்படுத்தும் பாதிப்பையும் குறைத்து மதிப்பிட முடியாது.

1999ஆம் ஆண்டில் வவுனியா அரசினர் விதை உற்பத்திப் பண்ணையில் பரவலாகக் காணப்பட்டதை முதன் முதலில் அவதானிக்கப்பட்டது. இதனை ஆய்வு செய்த விவசாயத் திணைக்களம் பல திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டது.

இத்தாவரம் ஆக்கிரமித்து வளரும் பல பண்புகளைக் கொண்டுள்ளதோடு மனிதனுக்கும் விலங்குகளுக்கும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது. எனவே இத்தாவரம் மேலும் பரவாது கட்டுப்படுத்த வேண்டியது மிக அவசியமானதாகும்.

இது சூரிய காந்தி குடும்பத்தை ( அஸ்ரறேசியே-**Asteracea**) சேர்ந்த ஒரு தாவர இனமாகும். இதன் தாவரவியல் பெயர் பாத்தீனியம் ஹிஸ்ரறோபோரஸ் இச்செடி வெண்தலை (**WhiteHead**) வெள்ளை தும்புத்தடி எனப் பல சாதாரணபெயர்களால் அழைக்கப்படுகின்றது. பாத்தீனியம் மேற்கிந்தியத் தீவுகளை பூர்விகமாகக் கொண்டது. பின்னர் இலத்தீன் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியா போன்ற இடங்களிற்கு இவை பரவியதாகக் கருதப்படுகின்றது. 1810ம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட கோதுமையுடன் எதிர்பாராத விதமாக இத்தாவரம் பரவியதாக அறியக் கூடியதாகவுள்ளது.

1987 ஆம் ஆண்டு இந்தியப் படையினர் இங்கு வந்த பின்னரே இத்தாவரத்தை 'இந்தியப்புல்' என இங்குள்ள விவசாயிகள் அழைக்கின்றனர். தற்போது இத்தாவரம் வவுனியா நகரப் பகுதிகளிலும் பாதையோரங்களிலும், குளக்கரைகளிலும், தரிசுநிலங்களிலும், வடிகால்களுக்கு அருகேயும் செறிவாகக் காணப்படுகின்றது.


அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களுக்கு அமைய இத்தாவரம் திருகோணமலை, கிரிமிட்டிய (குருநாகல் மாவட்டம்), பல்லேகலை(கண்டி மாவட்டம்), கந்தகெட்டிய (பதுளை மாவட்டம்), கோப்பாய் (யாழ். மாவட்டம்) ஆகிய இடங்களில் காணப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது.

இத்தாவரம் ஏறக்குறைய 1-1.5 மீற்றர் உயரத்துக்கு வளரக் கூடியது. வரட்சியான காலநிலையைத் தாங்கக் கூடியது. இச் செடியின் வாழ்க்கைக் காலம் 6-8 மாதங்களாகும். இதன் பூக்கள் வெண்ணிறமானது. 2 மில்லி மீற்றர் தடிப்பானவையாகும். ஒரு தனிச் செடி நூற்றுக்கு மேற்பட்ட பூமுடிகளைத் தோற்றுவிக்கக் கூடியது. ஒவ்வொரு பூமுடியும் ஏறத்தாள 300 விதைகளைக் கொண்டது. எனவே ஒரு தனிச் செடியிலிருந்து பல்லாயிரம் விதைகள் உருவாகின்றன. விதைகள் நீருடனும் விலங்குகளின் தோல் மயிர் மற்றும் வாகனங்களின் ரயர் போன்றவற்றுடன் ஒட்டிப் பரவுகின்றன. காற்றினால் பரவுவது மிகக் குறைவு. இவ்விதைகள் 2.3 ஆண்டுகளின் பின்னரும் கூட வீரியத்துடன் முளைக்கின்றன.



இவ்வியல்புகளினால் இத்தாவரம் மிகக் குறுகிய காலத்தில் பரந்த நிலப்பரப்பில் மிக வேகமாகப் பரவக் கூடியது.

இச்செடியிலிருந்து சுரக்கப்படும் இரசாயனப் பதார்த்தம் பாத்தீனியம் எனப்படும். இது மழை, பனி, நீர் போன்றவற்றுடன் சேர்ந்து கசிவதன் மூலம் மற்றைய தாவரங்களின் முளைத் திறனையும், வளர்ச்சியையும், இனப்பெருக்கத்தையும் பாதிப்பதாக மேற்படி நாடுகளில் அவதானிக்கப்பட்டுள்ளது. இவற்றில் இருந்து வெளியேற்றப்படும் இரசாயனப் பதார்த்தம் மனிதனுக்கு ஒவ்வாமையை உண்டாக்கி தோல் நோயையும் சுவாசத்தில் பாதிப்பையும் ஏற்படுத்துகின்றன. 'ஹே' காய்ச்சல் என்ற நோயையும் இப்பதார்த்தம் ஏற்படுத்துகின்றது எனவும் கூறப்படுகிறது. இத்தாவரத்துடன் தொடர்ச்சியாக வேலை செய்யும் போது தோலில் பெரும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.



பாத்தீனியம் ஏனைய தாவரங்களின் வளர்ச்சியையும் பெருக்கத்தையும் கட்டுப்படுத்துவதால் வெகுவிரைவில் ஏனைய தாவரங்கள் வளரும் நிலங்களை ஆக்கிரமித்து அவ்விடங்களில் உள்ள தாவரப் பரம்பலில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இதன் மகரந்தம் ஏனைய பூக்களில் விழும் போது அவற்றின் மகரந்தச் சேர்க்கைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதால் பயிர் விளைச்சல் பெருமளவில் குறைகின்றது இதனால இந்தியாவில் பல பயிர்களின் விளைச்சல் 40 வீதமாகக் குறைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. அவுஸ்திரேலியாவில் புல் உற்பத்தியில் 90 வீதம் வரை பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அறியப்பட்டுள்ளது.

விலங்குகள் புல்லுடன் இத்தா வரத்தை உண்ணும் பொழுது அவற்றின் பால், இறைச்சி போன்ற விலங்கு உற்பத் தியில் விகத்தியாசமான நிறங்களை உண்டாக்கி அவற்றின் தரத்தைப் பாதிப்பதாகவும் அறிய முடிகின்றது. ஆடு.மாடு போன்ற விலங்குகள் உணவுத் தட்டுப்பாடான காலங்களில் இக்களையை உண்டதால இறந்ததாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மேற்கூறிய பல்வேறு காரணங்களினால் இது பல ஆக்கிரமிப்புக் குணாதிசயங்களைக் கொண்ட ஒரு தாவரமாக விளங்குகின்றது. இத்தாவரம் மேலும் பரவுவதைக் கட்டுப் படுத்தாவிட்டால் இது எமது இயற்கைச் சூழலில் உள்ள தாவரங்களின் வளர்ச்சியையும், பெருக்கத்தையும், விளைச்சலையும் கட்டுப்படுத்தி ஆக்கிரமித்துக் கொள்ளும். அத்துடன் இயற் கையாகவுள்ள தாவரப் பல்வகைத் தன்மைக் கும் ஊறு விழைவித்து இயற்கைச் சூழலை மாற்றக் கூடியது. மனித இனத்துக்கும் விலங்குகளுக்கும் பல நோய்களையும் சுகாதாரச் சீர்கேடுகளையும் உண்டாக்கிப் பெரும் தாக்கத்தையும், பாதிப்பையும் உண்டு பண்ணும்.

எனவே இத்தாவரத்தை மேலும் பரவ விடாது கட்டுப்படுத்த வேண்டிய கட்டாய நிலைக்கு நாம் அனைவரும் தள்ளப்பட்டுள்ளோம். இத்தாவரத்தைப் பூக்க முன் கைகளால் பிடுங்கிவிடல் இரசாயனக்களை நாசினிகளைப் பயன்படுத்துதல் என்பவற்றால் கட்டுப் படுத்த முடியும். இதற்கு கிளை போசெட் அல்லது 3-4டி ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை சிபாரிசு செய்யப்பட்டவாறு விசிறலாம்.

இத் தாவரத்தை கையினால் பிடுங்கும் போது மனிதனுக்குத் தீங்கு விளைவிப்பதால் கை உறைகளைப் பயன்படுத்துவது அவசியம். இதனை வேருடன் பிடுங்காது அடிப் பகுதியுடன் வெட்டுவதால் அடிக்கட்டையிலிருந்து வீரியத்துடன் பல கிளைகள் வளருகின்றன. ஆகவே வேருடன் பிடுங்குவது அவசியமாகும்.

வேகமாகப் பரவிவரும் இத்தாவரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள், நலன்விரும்பிகள், மற்றைய நிறுவனங்கள் ஒன்றிணைந்து ஒத்துழைப்பு வழங்குவது அவசியமாகும். இதனை மேலும் பரவவிடாது கட்டுப்படுத்துவது நம் எல்லோரினதும் கடமையாகும்.

ஜெயந்திரன்

******

## பிந்துனுவெவ படுகொலை தீர்ப்பு ஜுலை முதல் திகதிக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

பிந்துனுவெவ முகாம் படுகொலை தொடர்பாக விசாரணை செய்து வரும் மூன்று நபர் விசாரணைக் குழு தமது தீர்ப்பை ஜுலை மாதம் 1ம் திகதி வழங்குவதாக அறிவித்துள்ளது. இதன் தீர்ப்பு கடந்த 11 ஆம் திகதியாக முன்னர் அறிவிக்கப்பட்டது. எனினும் தீர்ப்பு வழங்க தலைமை நீதிபதி தாம் தயாராக இல்லை என அறிவித்துள்ளதை யடுத்து மேற்படி தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதனிடையே பொய் சாட்சி கூறியதற்காக பாதுகாப்புச் சிறையில் வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முறைப்பாட்டுக்காரரின் சாட்சிகள் இருவரை மீண்டும் காவலில் வைக்க உத்தரவிடப்படுள்ளது. கொலை, கொலை முயற்சி, சட்டவிரோத மாகக் கூட்டம் நடத்தியமை போன்ற குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள 81 பேரில் 23 பேர் வழக்கு விசாரணை நடைபெறும் போது விடுதலை செய்யப்பட்டனர். ஏனையோருக்கான தீர்ப்பே வரும் ஜுலை முதாலாம் திகதி வழங்கப்படவுள்ளது.

## கொலை வழக்கு ஒத்திவைப்பு!

(கொழும்பு)

உடத்தலவின்ன பத்துப்பேர் படுகொலை தொடர்பாக நேற்று நடைபெறவிருந்த வழக்கு விசாரணை மொழிபெயர்ப்பாளர் இல்லாததால் இன்றுவரை ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

நேற்றைய தினம் முகமட்சிபான் என்பவர் சாட்சியம் அளிக்க இருந்ததாகவும் அவரது சாட்சியத்தைத் தமிழில் இருந்து சிங்களத்தில் மொழிபெயர்க்க மொழிபெயர்ப்பாளர் இல்லாததால் வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிவிக் கப்படுகிறது.


## மின்சார சபை ஊழியர் நால்வர் வேலை நீக்கம்

-ரூ 50 இலட்சம் மோசடி

சிறிலங்கா மின்சார சபையின் நிர்வாகப் பணிப்பாளர் ஒருவர் உட்பட நான்கு ஊழியர்கள் மோசடியில் ஈடுபட்டதாக வெளிவந்த தகவலையடுத்து அவர்களை வேலையிலிருந்து அகற்றுவதாக மின்சார சபை அறிவித்துள்ளது.

இவ்வாறு வேலை நீக்கம் செய்யப்பட்டோர் கண்டி மாநகர அபிவிருத்தி சபை நிர்வாகியும் அங்கு பணிபுரிந்த பொறியியலாளரும், ஊழியர் இருவருமாகும். இதற்கு முன்பும் இவ்வாறான மோசடிகள் இடம்பெற்றதாகவும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க எவரும் முன்வரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# பலவகைப் பிரயோக மென்பொருட்கள்



பிரயோக மென்பொருள்களே பல லட்சக்கணக்கான கணினிப் பாவனையாளர்களின் உபயோகத்தில் இருப்பவையாகும். பல நூற்றுக்கணக்காக பல்வேறு நிறுவனங்களால் தயாரிக்கப்படும் இம்மென் பொருட்கள் அல்லது பொதிகள் பற்றி மேலும் விரிவாகப் பார்ப்போம்.

பிரயோக மென்பொருளும் (**Application Software**) உலகில் முதலாவதாக பேசப்படுகின்றதுமான **Word Processing** (சொற்கள் ஒருங்கமைத்தல்) என்பது கணினித் துறையில் பிரதான மென்பொருளாக அமைந்துவிட்டது. அப்படியென்னதான் சாதாரண தட்டச்சு முறையிலிருந்து வேறுபட்டிருக்கிறது. அது என்னவென்றால், **Type** செய்தல்; பின் அதனை **Edit** செய்தல் பின் அதனை **Formatting** செய்தல்; குறித்த ஆவணத்தில் கவர்ச்சிகரமான ஒழுங்க மைப்பை (**Munipulation**) மேற்கொள்ளல். யாவும் **Word Processing** (சொற்கள் ஒருங்கமைத்தல்) என அழைக்கப்படும். மேலும், தட்டச்சு மூலம் தயாரிக்கப்படும் ஆவணத்தில் இல்லாத பல விடயங்கள் இவற்றில் உள்ளது. அவையாவன சொற்பிழை (**Spelling**), படவரைபுகள் (**Graphics**), பத்தி ஒழுங்கமைப்பு (**Paragraph Arrange**), களஞ்சியப்படுத்தி வைத்தல் (**Save for storage**) எனப் பல வசதிகளைக் கொண்டிருக்கிறது. இவற்றிற்கு உதாரணமாக் **Word star**, **Word perfect**, **Microsoft Word**, **Lotus Amipro** என்பவற்றைக் குறிப்பிடலாம்.


## ஸ்பிளட்சீற் என்வயர்மென்ரல் ரூல்:

## Spead Sheet environment tools:

இவ் **Application** கள் பல **sheet** களைக் கொண்ட **Document** களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. குறித்த ஒரு **sheet** 256 (நிரல்) **Columns** களையும் 8192 இன் மடங்குகளின் தொகையைக் கொண்ட நிரை **Raws** ஐயும் கொண்டுள்ளன. ஒரு **Raw** உம், ஒரு **Column** உம் இடைவெட்டுகின்ற பகுதி **Cell** என்று அழைக்கப்படும். இச் **sheet** களில் நகரக்கூடிய கறுப்புச் செவ்வகம் இருக்கும்: அதனை **Cell pointer** என அழைப்பர். **Cell pointer** கொண்டிருக்கும் **Cell** இல் மாத்திரமே தரவுகளைக் களஞ்சியப்படுத்த முடியும். இதனால் ஒரு **cell** இல் பதியப்பட்டிருக்கும் தரவுகளை இனங்காண்பதற்குப் **Cell Address** பயன்படுகிறது.

**Cell Address** ஆனது **Column Letter** உடன் **Raw Number** உம் இணைந்து வரும். உதாரணமாக **A1**, **IV 65536** எனக் குறிப்பிடலாம். **Column Letters A → Z, AA → AZ, BA → BZ** எனத் தொடங்கி **IA → IV** வரையான 256 **Columns** களாக இருக்கின்றன. கணிதப் பயன்பாட்டிற்குச் சாதாரண கணிதக் குறியீடுகளுடன், பெருக்கலுக்காக "*" உம், பிரித்தலுக்காக "/" உம் விதிவிலக்காகப் பாவிக்கப்படுகிறது. "A1" என்ற **cell** இல் 70 உம், "B1" என்ற **Cell** இல் 60 உம் இருப்பதாகக் கருதி, "C1" என்ற **cell** இல் இவற்றின் கூட்டுத்தொகையைப் பின்வருமாறு கணிக்கலாம். **Ms-Excel** ஆயின் "**=A1+B1**"எனவும், **Lotus** 123 ஆயின "**+A1+B1**" எனவும் பாவிக்கலாம்.

இவ் **Application** களை கணக்கியல் (**Accounting**), புள்ளிவிபர ஆய்வு (**Statistical Report**), தகவல் பராமரிப்பு (**Detabase**), படவரைபு (**Graphics**) எனப் பல தேவைகளைப் பூர்த்தியாக்கப் பாவிக்க முடியும். இவற்றிற்கு உதாரணமாக **Ouattro pro**, **Lotus** 123, **Ms-Excel** ஆகியவற்றைக் குறிப்பிடலாம். மேலும், இவற்றில் **Accounting Work**



நம்மவரால் தான் தயாரிக்க வேண்டியுள்ளது. இக்குறையை நிவர்த்தி செய்ய **Deak Easy**, **MyoB**, **Accpack** எனப் பல **Accounting Packages** இருக்கின்றன. இவ்வாறே, இவற்றில் உள்ள ஏனையவற்றிற்கும் தனித்தனி **Applications** இருப்பினும், பொதுவான சிறிய வேலைத்திட்டங்களை விரைவாகச் செய்வதற்கு **Spread sheets tools** பயன்படுகிறது.


## Presentation Design Packages:

விளம்பர நோக்கில் பார்வையாளர்களின் (**Audience**) புலன்களை ஈர்க்கக்கூடிய வகையில் **Slide** கள் (விளம்பரப் பக்கத்தை ஒத்தது) தயாரிக்கப்பட்டு, கணினித் திரை மூலமோ அல்லது **Projector** ஊடாகத் திரையில் வீழ்த்தியோ வெளிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்கக்கூடிய மென்பொருள் இவையாகும்.

தனித்தனி **Slide** ஐ பிரதான பாடக்குறிப்புகளாகப் நிரப்பி, ஒரு விரிவுரை அல்லது பேச்சுக்கு வேண்டியவற்றைத் தொகுக்கலாம். பின் தனித்தனி **Slide** ஆக ஒளிபுகக்கூடிய (**Transparent**) தளில் **Print** (அச்சுப்பதிப்பு) செய்து **Presentation Projector** ஊடாக திரையில் வீழ்த்தி விளக்கமளிக்கலாம்.

இச் **Slide** ஒன்றில் **Objects** (செயற் திட்டப்பொருள்) கொண்டு வடிவ மைப்பதில் (நேரடியாக இதில் **type** செய்ய முடியாது) தான் அனைத்துமே அடங்கியிருக்கிறது. இச் **Slide** இல் **Special Background**, **Picture**, **Sound** ஆகியவற்றுடன் **Vedio clip**, **Chart Wizard**, **Organization chart**, மற்றைய **Application** களையும் **Objects** களாகப் பாவித்து வேண்டிய இலக்குக்கேற்ப **Slide** ஐ வடிவமைக்கலாம். மேலும், இச் **slide** ஐ சாதாரண ஆவணமாக **Greetings Cards** (வாழ்த்து மடல்கள்) தயாரிக்கப் பாவிக்க முடியும்.

ஒரு **Complete Presentation** (பூரண நிகழ்ச்சித் தொகுப்பு) தயாரிப்பதற்கு, தனித்தனி **Slide** இற்கான விபரங்களை முதலில் தொகுக்க வேண்டும். பின்னர் ஒவ்வொரு **Slide** இலுமுள்ள ஒவ்வொரு **Objects** இற்குமான ஒவ்வொரு **Animation Settings** (இயங்கு நிலைச் செயல் வரிசைப்படுத்தல்) மேற்கொள்ள வேண்டும். இறுதியாக **Presentation View** இற்கான **Mouse Control** அல்லது **Time Control Settings** செய்ய வேண்டும். திரையில் **Presentation** ஐப் பார்க்கும் போது நிபந்தனையுடன் இடைவிடாது தொடர்ந்து பார்ப்பதற்கான வசதியும் இம்மென்பொருள்களில் உண்டு. இச் செயற்பாடுகள் அனைத்தையும் முடிவுக்குச் கொண்டு வந்த பின்னர் கணினியில் **View** செய்து பார்க்கலாம். அல்லது கணினியிலிருந்து **Vedio projector** இற்கு



இணைப்பைக் கொடுத்து பெரிய திரையிலும் வீழ்த்திப் பார்க்கலாம்.

குறித்தவொரு விடயத்தை எளிதாக **Audience** (சபையோர்) மத்தியில் சென்றடையக் கூடியதாக வைப்பதற்கு சிறந்த ஊடகமாக இம் மென்பொருள்களைப் பயன்படுத்தலாம். இவற்றிற்கு உதாரணமாக **Microsoft powerpoint**, **Lotus Freelans** ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

ⓘⓘⓘⓘⓘⓘ

**ஆர்.கே.ஜீவலிங்கம்**

# தமிழ் மக்கள் இயல்பு வாழ்விற்குத் திரும்ப ஐ.தே.மு. அரசாங்கம் தவறிவிட்டது

**- யாழ். தனியார் பேருந்து போக்குவரத்துச்சங்கம் குற்றச்சாட்டு**

(யாழ்ப்பாணம்)

ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இயல்பு நிலையைத் தோற்றுவித்து உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்துள்ள மக்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த தவறிவிட்டது என்று யாழ். மாவட்ட தனியார் பேருந்து போக்குவரத்துச் சங்கம் தெரிவித்துள்ளது.

தமிழர்களின் பாரம்பரிய விவசாய நிலங்களை இராணுவம் உயர் பாதுகாப்பு வலயமாகக் கூறிக் கொண்டு தமது சொந்த இடங்களில் மீளக் குடியேற மறுத்து வருவதை ஐ.தே.மு. அரசு பாராமுகமாக இருக்கிறது. இதனால் சிரான் அமைப்பின் நடவடிக்கைகளும் முடங்கியுள்ளன.

2001ல் இடைக்கால நிர்வாகத்தை முன்வைத்து வெற்றிகண்ட அரசு தற்போது மௌனம் சாதிக்கின்றது என்றும் அவ்வமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

# யாழ். நகரில் குழு மோதல்; பலர் படுகாயமடைவு!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற குழு மோதலில் பலர் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாஷையூர் அந்தோனியார் ஆலய உற்சவத்தையொட்டி நேற்று முன்தினம் நள்ளிரவு ஆரம்பமான இசை நிகழ்ச்சிக்குப் பின்னர் ஆரம்பமான சண்டையே பின்னர் இரு ஊர்களுக்கிடையிலான கடும் மோதலாக வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அப்பகுதி பதற்றம் அடைந்து காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# போதைப்பொருள் எதிர்ப்பு வாரம் பாடசாலைகளில் விசேட நிகழ்ச்சிகள்

(கொழும்பு)

போதைப்பொருள் எதிர்ப்பு வாரம் இம் மாதம் 23ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 26ஆம் திகதி பாடசாலைகளில் இதற்கான விசேட நிகழ்ச்சிகள் நடாத்தப் படும்.

இந் நிகழ்ச்சிகள் மாணவர்களிடையே போதைப் பொருள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்று கல்வி அமைச் சின் உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் இடம்பெறும் காலைக் கூட்டங் களில் போதைப் பொருளின் சமூகக்கேடு குறித்து மாணவர் களுக்கு விளக்க வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.

# இராணுவ 'பீல்ட் பைக்' மோதி இளைஞர் பலத்த காயம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். பண்ணாகம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் 'பீல்ட் பைக்' மோதியதில் இளைஞர் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளானார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடந்தது.

எஸ்.மகேந்திரராஜா (வயது-26) என்பவரே ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சித்தங்கேணிச் சந்தியில் இந்த விபத்து நேரிட்டது. மேலும் பீல்ட் பைக் சிப்பாய்களும் காயங்களுடன் இராணு ட்ரக் வண்டியில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

# மின்சாரசபை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் குதிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா மின்சார சபையின் சில தொழிற்சங்க அங்கத்தவர்கள் நேற்றுக் காலை முதல் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

2004 ஆம் ஆண்டுக்கான சம்பள உயர்வை வழங்கக் கோரி இந்த வேலை நிறுத்தம் இடம் பெறுகின்றது.

எனினும் இந்த வேலைநிறுத்தம் காரணமாக மின் பாவனையாளர்களுக்குப் பிரச்சினைகள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

# வாகன விபத்துக்களில் சிக்கி அறுவர் பலி; 34 பேர் காயம்!

(கொழும்பு)

தென்பகுதியில் நேற்று நண்பகலுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் ஆறு பேர் உயிரிழந்ததுடன் 34 பேர் காயமடைந்துள்ளனர். கல்பிட்டி பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் காயமடைந்துள்ளார். அத்துடன் அநுராதபுரத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, கொஸ்கொட பிரதேசத்தில் வான் ஒன்று மோதியதில் சைக்கிளில் சென்ற ஒருவர் உயிரிழந்துள்ளார். அதேவேளை, பொலநறுவையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வத்தேகமவில் இருந்து உகுகல நோக்கிச் சென்ற போக்குவரத்துச்சபை பஸ் வண்டி ஒன்று கடுகஸ்தோட்டப் பகுதியில் விபத்துக்குள்ளானதில் அதில் பிரயாணம் செய்த 25 பேர் படுகாயமடைந்தனர்.

# டோக்கியோ நிதியைப் பயன்படுத்த பாராளுமன்றத்தில் புதிய சட்டமூலம்

## - ஐ. தே. மு. அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

**டோக்கியோவில் கிடைத்த நிதியை சரியான முறையில் பயன் படுத்துவது குறித்த புதிய சட்ட மூலம் ஒன்றை சபையில் நிறை வேற்றுவதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தீர்மானித் துள்ளது.**

ஒருசில வாரங்களுக்குள் இப் புதிய சட்டமூலம் சபையில் சமர் பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

நிதிப்பயன்பாட்டில் அரசியல் வாதிகளின் தலையீட்டைத் தவிர்க் கும் வகையிலும் ஊழல்களுக் கெதிரான நடவடிக்கைகளைக் கடுமையாக்கும் வகையிலும் இந் தப் புதிய சட்டமூலம் அமையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

டோக்கியோ மாநாட்டின் பின்னர் அமெரிக்க துணை வெளிவிவகார அமைச்சர் ஆர்மிரேஜ் மற்றும் ஜப்பானின் இலங்கைக்கான விசேட தூதுவர் யசுகி அகாஷி ஆகியோர் இலங்கைக்கு முன்னர் கிடைத்த நிதிஉதவிகள் சரியான முறையில் பயன்படுத்தப்படாதது குறித்து பிரதமரிடம் தனிப்பட்ட முறையில் கடுமையான விசனத்தைத் தெரி வித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

# வவுணதீவில் படையினர் பொதுமக்கள் மீது கெடுபிடி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வவுணதீவு பகுதி யில் இராணுவத்தினரும் பொலி சாரும் தமது சோதனை கெடுபிடி களை அதிகரித்துள்ளனர்.

வவுணதீவு சோதனை நிலை யத்தில் கடந்த சனிக்கிழமை விடு தலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியிலிருந்து சென்ற பொது மக்கள் பல்வேறு கெடுபிடிகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். பொது மக்கள் கொண்டு சென்ற பொருட் களை சோதனையிடப்பட்டது.

அத்துடன் வாகனங்களில் சென்ற பயணிகளையும் இறக்கி வவுணதீவு இராணுவத்தினர், பொலிஸார், புல னாய்வுப் பிரிவினர் ஆகியோர் சோதனை செய்துள்ளனர்.

இதனால் பொதுமக்கள் பெரிதும் பீதியடைந்துள்ளனர்.

# மாதகலில் ஒரே இரவில் மூன்று வீடுகளில் திருட்டு!

(யாழ்ப்பாணம்)

மாதகல் பகுதியில் ஒரே இடத் தைச் சேர்ந்த 03 வீடுகளில் நேற்று முன்தினம் இரவு திருடர்கள் தங்க நகைகள் மற்றும் பெறுமதி மிக்க பொருட்களை களவாடிச் சென்றுள் ளனர்.

இரண்டு வீடுகளில் வீட்டு உரிமை யாளர்கள் தூங்கிக் கொண்டிருந்த வேளை திருடியவர்கள், மூன்றாவது வீட்டில் பெண்கள் இருவரும் அணிந் திருந்த நகைகளையும் பறித்துக் கொண்டு சென்றுள்ளனர்.

மொத்தமாக 15 பவுண் நகை களும் பெறுமதி மிக்க சொத்துக் களும் களவாடப்பட்டதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தனர்.

# இலங்கைக்கு கூடுதல் நிதி உதவி வழங்க அமெரிக்கா தயார்

## - ஆர்மிரேஜ் தெரிவிப்பு

டோக்கியோ மாநாட்டில் இலங் கைக்கு உதவ உறுதியளிக்கப் பட்டதற்கு மேலதிகமான எதிர் காலத்தில் நிதி உதவியை வழங்க அமெரிக்கா தயாராய் உள்ளதாக அமெரிக்காவின் வெளிவிவகார துணை அமைச்சர் ஆர்மிரேஜ் கூறியுள்ளார்.

டோக்கியோ மாநாடு முடி வடைந்த பின்னர் சிறிலங்காவின் அமைச்சர் மிலிந்த மொறகொடவை டோக்கியோவில் சந்தித்து உரை யாடிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அமெரிக்க காங்கிரஸ் சபையில் தற்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நிதிச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர் சிறிலங்காவிற்கு கூடுதலான நிதி உதவியை வழங்க அமெரிக் காவால் முடியும். ஆனால் சிறி லங்கா அரசாங்கம் ஊழல்களையும், நிர்வாகச் சீர்கேடுகளையும் ஒழித்து நிதியை உரிய முறையில் பயன் படுத்த வேண்டியதன் முக்கியத்து வத்தையும் ஆர்மிரேஜ் வலியுறுத்தி யுள்ளார்.

# யாழ். மாவட்ட கண்காணிப்புக்குழு தலைவராகப் புதியவர் நியமனம்

இலங்கை போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவின் யாழ். மாவட் டத் தலைவராக கரினா எரிக்சன் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் யாழ். மாவட்டத்திற் கான தலைவராகப் பணியாற்றிய ஒலே புருண்டம் தனது சேவைக் காலத்தை முடித்து நாடு திரும் பினார்.

ஒலே புருண்டத்தின் சேவை கடந்த சனிக்கிழமை முடிவுக்கு வந்தது.

# பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு யாழ். குடாநாட்டில் தீவிர ஏற்பாடு

பொங்குதமிழ் இறுதிநாள் நிகழ்வு கள் தொடர்பான கலந்துரை யாடல்கள் யாழ் குடாநாட்டில் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 27ஆம்திகதி நடை பெறவுள்ள பொங்குதமிழ் இறுதி நாள் நிகழ்வில் மக்களை கலந்து கொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர்கள் - தனியார் கல்வி நிலையங்கள், பாடசாலைகள், ஆலய நிர்வாகசபைகள், மாதர் சங்கங்கள், மக்கள் குடியிருப்புக்களுக்கும் சென்று கலந்துரையாடி வருகின் றனர். இதேவேளை தென்மராட்சி வலிகாமம் மேற்கு மற்றும் பல் கலைக்கழக பகுதிகளில் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்விற்காக அலங் காரப்பந்தல்கள் அமைக்கப்பட் டுள்ளதோடு ஒலிபெருக்கிகள் மூலம் பொங்குதமிழ் பாடல்கள் மற்றும் கவிதைகள் ஒலிபரப்பப்பட்டு வருவதோடு சிவப்பு மஞ்சள் கொடி கள், பதாகைகள் என்பனவும் கட்டப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்களால் தெரிவான என்னை மதிக்காமையையிட்டு எவரும் கவலைகொள்வதாகத் தெரியவில்லை!

## சிறிலங்கா சனாதிபதி கடும் விசனம்

(கொழும்பு)

மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட எனக்கு கௌரவம் அளிக்கப்படாதையிட்டு யாரும் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை என்று சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கவலை தெரிவித் துள்ளார்.

சனாதிபதி மாளிகையில் கடந்த செவ்வாய் அன்று சனாதிபதி தலைமையில் இடம்பெற்ற பொதுசன ஐக்கிய முன்னணியின் நிறை வேற்றுக் குழுக்கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரி வித்தார்.



முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கதிர்காமர், விடுதலைப்புலிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பும் கடிதங்களில் அவருக்குரிய கௌரவத்தைக் கொடுப்ப தில்லை. அவர் இந்த நாட்டு மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவர் அல்லவா? எனக்கேள்வி எழுப்பினார். இதன் பின்னர் உரையாற்றிய சனாதிபதி சந்திரிகா குமார துங்க,"மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட ரணிலுக்கு கௌரவம் கொடுக்கச் சொல்கிறீர்கள்? ஏன் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சனாதிபதியையும் உங்கள் தலைவியையும் இவ் விடயத்தில் மறந்துவிட்டீர்களா?" என சற்று விசனத்துடன் கேட்டுக் கொண் டார்.

# உரும்பிராயில் படையினர் நடவடிக்கையால் விவசாயத்தில் ஈடுபட முடியாது அவலம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். உரும்பிராய் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் நட வடிக்கைகளால் பெருமளவு நிலங் கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலையில் இருப்பது குறித்து கவலை தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதற்கு உரியவாறான நட வடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் வேண்டுகை விடுத்துள்ளனர்.

உரும்பிராய் மேற்குப் பகுதியில் கடந்த காலங்களில் இராணுவத் தினால் அமைக்கப்பட்ட மண் அரண்கள் காரணமாகவும் அங்கு காணப்படும் பொறிவெடிகள், மிதி வெடிகள் இன்னமும் அகற்றப் படாமல் இருக்கின்றது.

பெருமளவு விவசாயம் செய்யும் நன்னிலங்கள் இதனால் கடந்த 08 வருடங்களாகப் பயிர்ச் செய்கை பண்ணப்படாமல் இருப்பதாகவும் இது சம்பந்தமாக விவசாயிகளால் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்ட போதும் எதுவித நடவடிக்கையும் கிடைக்கவில்லை எனவும் தெரி விக்கப்படுகின்றது.

# வடக்கு-கிழக்கில் இருந்திராத தமிழர் தாயகத்திற்கு பிரதமர் ரணில் அங்கீகாரம் பெற முயல்கிறார்

## - சிஹல உறுமயத் தலைவர் கண்டனம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் என்றுமே இருந் திராத தமிழர் தாயகம் தொடர்பாக ஜப்பானில் இடம் பெற்ற நிதியுதவி வழங்கும் மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேசியதன் மூலம் சர்வதேச சமூகத்திற்குப் புதிய செய் தியை வழங்கி அதற்கு அங் கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்க முயற்சிகளை மேற் கொண்டுள்ளார்.

இவ்வாறு குற்றம் சாட்டுகிறார் சிஹல உறுமயத் தலைவர் திலக் கருணாரத்ன. இலங்கைக்கு ஜப்பான் மாநாட்டில் கிடைத்த நிதியுதவிகள் தொடர்பாக கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் இயக்கத் திற்கு வடகிழக்கில் வழங்கப்பட வுள்ள இடைக்கால நிர்வாக சபை தமிழர் தாயகம் என்பது தொடர்பாக இம்மாநாட்டில் பிரதமர் பிரஸ்தா பித்ததன் மூலம் அவற்றைச் சர்வ தேச சமூகத்திற்கு உத்தியோக பூர்வமாக அறிவித்து சர்வதேச சமூகத்திற்குப் புதியதொரு கருத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

சர்வதேச நாடுகள் வெறுமனவே நமக்கு நிதியுதவிகளை வழங்க வில்லை. பல நிபந்தனைகளை அவை விதித்துள்ளன.

விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்பட்டு வடகிழக்குப் பிரச்சி னைக்குத் தீர்வு காண வேண்டும் என்பது பாரதூரமான நிபந்தனை யாகும்.

இடைக்கால நிர்வாக சபை அமைக் கப்படுவது மற்றும் தமிழர் தாயகக் கோட்பாடு என்பவற்றை நாம் எதிர்க் கின்றோம்.

பெருந்தொகைக் கடனைப் புலி கள் இயக்கத்திற்கு தாரை வார்க் கும் அரசாங்கத்தின் திட்டத்தைத் தடுத்து நிறுத்த முனையாத சனா திபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வெறுமனே அபி விருத்தி லொத்தர் சபையைத் தனது பொறுப்பில் எடுத்திருப்பதால் நாட்டிற்கு எதுவித நன்மையும் இல்லை. அத்தோடு உலகத்திற்கு இலங்கை கடனாளியாகும் போது இதனைக் கண்டும் காணாமல் இருக்க என்ன காரணமோ தெரிய வில்லை?

இதேவேளை, இன்னொன்றையும் பிரதமர் அறிய வேண்டும். ஆப் கானிஸ்தானை அழித்த அமெரிக்கா அதனை அபிவிருத்தி செய்யப் பெருமளவு நிதியை வழங்குவதாக உறுதியளித்தது.

ஆனால், நூற்றுக்கு ஒரு சதவீத உதவியையேனும் வழங்கவில்லை. அமெரிக்காவை நம்பிய ஆப்கானிய அரசின் ஆட்சி இன்று காபூல் நகருக் குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றது.

கடனைப் பெற்று நாட்டைக் கொண்டு செல்ல முயலும் பிரதமர் ரணிலின் ஆட்சியும் கொழும்புக் குள்ளே முடங்கி கிடக்கும் நிலைமை ஏற்பட்டாலும் ஆச்சரிய மான விடயமல்ல என்றும் திலக் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

# அபிவிருத்திக்குழு கூட்டம்

மட்டக்களப்பு மாவட்ட அபி விருத்தி சம்பந்தமாக ஆராயும் கூட் டம் கடந்த ஞாயிறன்று காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு மாவட்ட அர சாங்க அதிபர் இ.மோனகுருசாமி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதமரின் செய லாளர் பிரட்மன் வீரக்கோன், சிரேஷ்ட ஆலோசகர் குணசிங்கம் ஆகியோரு டன் மட்டக்களப்பு மாவட்ட திணைக் களத் தலைவர்களும் கலந்து கொண் டனர்.



### சிந்தனைக்கு

சிங்கள அரசின் திட்டமிட்ட ஒடுக்கு முறை காரணமாகவே நாம் சுயநிர்ணய உரிமைக்காகவும் அரசியற் சுதந்திரத்திற்காகவும் போராட்டத்தில் குதித்தோம்.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 17-06-2003

## பொய்களால் எழுந்துள்ள சங்கடம்

விடுதலைப்புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட விடயத்தில் உண்மைக்கு மாறான தகவல்களைக் கூறிவிட்டு தற்பொழுது கூறிய பொய்களை நியாயப்படுத்தவும், நியாய பூர்வமான கேள்விகளுக்குப் பதில் அளிக்கமுடியாது மேலும் மேலும் பொய்களையும், முன்னுக்குப் பின் முரணான தகவல்களையும் சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சு வெளியிட வேண்டியதொரு அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் கப்பல் இலங்கையின் கடற்பிராந்தியத்திற்குள் வைத்தே மூழ்கடிக்கப்பட்டது என்ற தனது அறிவிப்பை சிறிலங்காக் கடற்படையினரால் நிருபிக்க முடியவில்லை. அவர்கள் சுட்டிக் காட்டிய பகுதியில் கப்பல் ஒன்று மூழ்கியதற்கான ஆதாரங்கள் எவையும் கண்காணிப்புக் குழுவினருக்கு கிடைக்கவில்லை. இதன் மூலம், கப்பல் எங்கு மூழ்கியிருப்பினும் சரி, சிறிலங்காக் கடற்படை சுட்டிக் காட்டிய இடத்தில் மூழ்கவில்லை என்பது வெளிப்படையானது.

ஆனால், எங்கு மூழ்கியது, எவ்வாறு தாக்கப்பட்டது என்பதற்கு அப்பால் தற்பொழுது சிறிலங்காக் கடற்படை பதில் அளிக்க வேண்டியுள்ள் முக்கியவிடயம், விடுதலைப்புலிகளின் கப்பலை வழிமறித்த கடற்படையினர் உடனடியாக ஏன் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவை அழைக்கவில்லை என்பதே. அதிகாலை சுமார் 3.30 மணியளவில் வழிமறிக்கப்பட்ட கப்பலானது காலை ஏழு மணியளவில் மூழ்குவதற்கு முன்பாகவிருந்த பல மணி நேரத்தில் ஏன் இதனைக் கடற்படை செய்யவில்லை. அவ்வாறு செய்திருப்பின் இன்று தான் பொய் கூறவில்லை என்பதை தற்பொழுது நிருபித்திருக்கலாமே.

இருப்பினும், கடற்படை கண்காணிப்புக்குழுவிற்கு அறியத்தராமைக் கான காரணத்தைக் கண்டறிய பெரிதாக ஆய்வு எதுவும் தேவையில்லை. ஏனெனில் கப்பல் மூழ்கடிக்கப்பட வேண்டும் என்பதிலும், அதுவரையில் இவ்விடயம் கண்காணிப்புக்குழுவினரிடம் சென்று சேர்ந்து விடக்கூடாது என்பதிலும் கடற்படை குறியாகவே இருந்தது என்பதே உண்மை. ஏனெனில் கப்பல் சர்வதேசக் கடற் பரப்பில் நிற்பதைக்கடற்படையினர் நன்கே புரிந்து கொண்டிருந்தனர்.

இந்நிலையில் கப்பல் மூழ்கடிக்கப்படும் வரையில் கண்காணிப்புக் குழுவினருக்குத் தகவல் எதுவும் சென்று சேர்ந்துவிடுதல் கூடாது. அப்படிச் சென்று சேர்ந்து விடுமானால் கப்பல் மூழ்கடிக்கப்படுதல் என்பது சாத்தியமற்றதாகி விடும் என்பது கடற்படையினருக்குத் தெரிந்ததொன்றாகவே இருந்தது. இந்நிலையில் தான் கப்பலைப் பல மணிநேரம் அவர்கள் வழிமறித்திருந்தும் கண்காணிப்புக்குழுவிற்குத் தெரியப்படுத்தவில்லை.

இதேவேளை, கப்பல் மூழ்கடிக்கப்பட்டதும் கப்பல் மூழ்கடிப்பு எங்கே நடந்தது, சர்வதேசக் கடற்பரப்பிலா அன்றி இலங்கையின் கடற்பரப்பிலா என்பது போன்ற கேள்விகளே முதன்மை பெற்றன. இக்கப்பல் விவகாரத்தில் யுத்த நிறுத்த விதிமுறைகளையோ, யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு ஒன்று செயற்பட்டு வருகின்றது என்பதையோ சிறிலங்கா அரசாங்கம் கருத்திற் கொள்ளவில்லை.

ஆயினும், கப்பல் மூழ்கடிக்கப்படுமுன் கண்காணிப்புக் குழுவினரை கடற்படை ஏன் அழைக்கவில்லை என்ற கேள்வி சிறிது காலம் தாழ்த்தியாயினும் எழுந்த போது– கப்பல் மூழ்கடிக்கப்பட்ட போது அதற்கு ஏதுவாகக் கடற்படை கூறிய விளக்கங்கள் இக்கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் வகையில் பொருத்தப்பாடானவையாக அமையவில்லை. எடுத்துக்காட்டாகக் கப்பலைக் கடற்படையினர் தாக்கி மூழ்கடித்தனர் எனக் கூறப்பட்ட விடயம் சிறிலங்கா அரசாங்கமும் – கடற்படையும் யுத்த நிறுத்த உடன்பாட்டை எந்தவித யோசனையும் இன்றி மீறின என்பதை வெளிக்காட்டுவதாக அமைந்துவிட்டன.

இந்நிலையில், தற்பொழுது விடுதலைப்புலிகளின் கப்பலை கடற்படையினர் தாக்கும் முன்பே அது வெடிக்க வைக்கப்பட்டு விட்டதாகவும் கப்பல் மூழ்கிவிட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு கூறத் தொடங்கிவிட்டது. அதாவது, முதலில் கப்பலை மூழ்கடித்ததாகவும் பின்னர் தாக்கினோம் மூழ்கடிக்கவில்லை எனவும், தற்பொழுது தாக்கவே இல்லை எனவும் பாதுகாப்பு அமைச்சு கூறத் தொடங்கியுள்ளது. இன்னும் நெருக்கடிகள் ஏற்பட்டாலோ அன்றி கொடுக்கப்படுமானாலோ தாம் அப்படியொரு கப்பலைக் காணவில்லை என்றே சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு கூறிவிடவும் கூடும்.

இவ்வாறு பொய்கள் கூறுவது மட்டுமல்லாது கண்காணிப்புக்குழுவின் விசாரணைகளைத் திசைதிருப்பிவிடும் நோக்கிலும், விசாரணைக்கான தடயங்கள் கிடைக்கப் பெறாதவகையிலும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். எடுத்துக் காட்டாக கப்பல் மூழ்கடிக்கப்பட்டதாக விடுதலைப்புலிகள் கூறிய இடத்திற்குக் கண்காணிப்புக்குழுவினரை கடல் வழியாக உடனடியாக அழைத்துச் செல்லாததைக் குறிப்பிட முடியும். கடல் கொந்தளிப்பு நிலையில் இருப்பதாக சாக்குப் போக்குக் கூறித் தட்டிக்கழித்து விட்டனர்.

இந்நிலையில், விடுதலைப்புலிகளின் கப்பல் எங்கு மூழ்கியது என்பதைக் கண்காணிப்புக்குழு கண்டறிதல் என்பது சிரமமானதாகவே இருக்கும். ஆனால், நிச்சயமாகக் கண்காணிப்புக் குழுவிற்குத் தெரிந்திருக்கவும், விளங்கிக் கொள்ளக் கூடியதுமான இரண்டு விடயங்கள் உண்டு. ஒன்று சிறிலங்கா கடற்படை மூழ்கடித்ததாகக் கூறிய இடத்தில் கப்பல் மூழ்கவில்லை என்பது. இரண்டு, கண்காணிப்புக்குழுவிற்கு தகவல் தருவதை கடற்படையினர் திட்டமிட்டே தவிர்த்திருந்தனர் என்பது. இவ்விரண்டுமே இக்கப்பல் மூழ்கடிப்பு விவகாரத்தில் சிறிலங்கா அரசாங்கமும், கடற்படையும் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கவும், யுத்த நிறுத்த உடன்பாட்டு விதிகளை உளப்பூர்வமாகக் கைக் கொள்ளவும் தயாராகவில்லை என்பதையே வெளிப்படுத்துவதாகவுள்ளது.

# ரத்வத்த குழுவினரின் தாக்குதலை உயிருக்குப் பயந்தே தெரிவிக்கவில்லை!

## - பொலிஸ் அதிகாரி சாட்சியம்

(கொழும்பு)

ரத்வத்தவின் புதல்வர்கள் லொகான், சானுக ஆகியோர் வந்து சுட்டதாக காயப்பட்டவர் தம்மிடம் தெரிவித்ததை தான் தனது உயிருக்கு உத்தரவாதமின்மையால் அந்த தகவலை உயர் அதிகாரிகளிடம்தெரிவிக்கமறுத்ததாக உடத்தலவின்ன படுகொலை வழக்கில் சாட்சியமளிக்கையில்; கட்டுகஸ் தோட்டை பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

மேலும் தான் ரகசியப் பொலிசாரிடம் இதனைக் கூறும்வரை தமது பதவிக்கும் உயிருக்கும் ஆபத்து ஏற்படும் எனக் கருதி ரகசியமாக வைத்திருந்ததாகவும் கூறியுள்ளார்.

சாட்சி மேலும் கூறுகையில் சம்பவம் நடந்த உடத்தலவின்ன என்ற இடத்தில் சென்று பார்த்தபோது வான் ஒன்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய நிலையில் இருந்ததை அவதானித்தேன். வெற்றுத்துப்பாக்கிரவைக் கோப்புக்கள் அங்கு காணப்பட்டன. அவற்றைச் சேகரிக்க உயரதிகாரிகள் அனுமதி மறுத்துவிட்டனர். விசாரணைக்குப் பயன்படும் என நான் நினைத்தேன்.

அயற்பகுதி பொலிஸ் உயரதிகாரிகள் இங்கு சமுகமளிக்கவில்லை. காயப்பட்டவரின் காயங்களுக்கு முதலுதவி செய்து அவரிடம் விசாரித்தேன். ரத்வத்தவின் ஆட்கள் வந்து சுட்டதாக அவர் கூறினார். நான் எனது உயரதிகாரிகளுக்கு இதனைத் தெரிவிக்கவில்லை. நான் எந்தக் கட்சிக்காகவும் வேலை செய்பவனல்ல என்றார்.

# மருத்துவ உத்தியோகத்தர் வேலைநிறுத்தம் நேற்று மீண்டும் ஆரம்பமாகியது

(கொழும்பு)

அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் சங்கம் தமது கோரிக்கைகளுக்கு ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய தீர்வுகள் கிடைக்காது விட்டால் தொடர்ந்தும் வேலை நிறுத்தம் செய்யப்போவதாகத் தெரிவித்திருக்கிறது.

கொழும்பில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் இந்தத் தீர்மாணம் எடுக்கப்பட்டது.

அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் சங்கத்தின் வேலைநிறுத்தம் நேற்று ஆறாவது நாளாக ஆரம்பிக்கப்பட்டது. வார இறுதியில் தற்காலிகமாகவேலை நிறுத்தம் கைவிடப்பட்டிருந்தது.

நேற்றுக்காலை தொடக்கம் வைத்தியர்களின் வேலை நிறுத்தம் மீண்டும் ஆரம்பமாகியிருக்கிறது.

## வேவு விமானம் நோட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுப் பகுதியில் கடந்த சனிக்கிழமை மாலை சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான வேவுவிமானமொன்று தாழப்பறந்து நோட்டமிட்டது. மாலை 3.30 மணியளவில் இவ்வாறு அவ் விமானம் நோட்டமிட்டது.

(20)

# கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டம்; அரச வைத்தியர்கள் மீண்டும் வேலை நிறுத்தம்!

(கொழும்பு)

அரசாங்க வைத்தியர்கள் இடைநிறுத்தியிருந்த வேலை நிறுத்தத்தை நேற்றுக் காலை 8.00 மணி முதல் மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

நாடு முழுவதிலும் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சுமார் 7,000 வைத்தியர்கள் இந்தப் போராட்டத்தில் இறங்கியுள்ளதாக வைத்திய அதிகாரிகள் சங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை வெளிநோயாளர் பிரிவுக்குச் சென்ற ஆயிரக்கணக்கானோர் ஏமாற்றத்துடன் திரும்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியர்களின் வேலை நிறுத்தம் தொடர்பாக அமைச்சரவையில் பிரஸ்தாபிக்க இருப்பதாக சுகாதார அமைச்சர் தயாரட்ண தெரிவித்துள்ளார்.

தமது கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை தொடர்ந்தும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக அரசாங்க வைத்தியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# அயர்லாந்து அணிக்கெதிரான போட்டியில் சிம்பாவ்வேக்கு 8 விக்கெட்டுக்களால் வெற்றி

சிம்பாவ்வே -அயர்லாந்து அணிகளுக்கிடையில் வெலிங்டனில் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் சிம்பாவ்வே அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற இப் போட்டியில் முதலில் ஆடிய அயர்லாந்து அணி 48.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் வி.கிவெஸ்லி 56 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கீத்ஸ்ரீக் 29 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுகளையும் ஹொண்டோ 53 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு ஆடிய சிம்பாவ்வே 40.1 ஓவரில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 199 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

இதில் இப்ராஹீம் ஆட்டம் இழக்காது. 81 ஓட்டங்களைப் பெற்றார்.

## கென்ற் அணியில் முகமட் சமி

பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் முகமட் சமி இங்கிலாந்தின் பிராந்திய அணியான கென்ற் அணிக்கு விளையாடவுள்ளார்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடர் முடிவடைந்த பின்னர் இவர் கென்ற் அணிக்காக விளையாடுவார் என பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.

22 வயதான சமி யூலை ஓகஸ்ட் மாதங்களில் கென்ற் அணிக்குச் சார்பாக விளையாடுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



டிமிட்ரி கொமனிகவ் என்ற ரஷ்ய நீச்சல் வீரர் பார்சலோனாவில ஆண்களுக்கான 200 மீற்றர் தூரத்தை 2நிமி. 9.52 செக்கனில் நீந்தி சாதனை படைத்துள்ளார்.



# இந்.-சிறிலங்கா கடற்படை இடையே 1992இல் இருந்து ஒத்துழைப்பு உண்டு!

## முன்னாள் இலங்கைக்கான தூதுவர் ஜே. என். டிக்சிற்

(லண்டன்)

இந்திய கடற்படையும், சிறிலங்கா கடற்படையும் 1992ஆம் ஆண்டு முதலே பரஸ்பரம் ஒத்துழைத்து வருகின்றார்கள். தாக்குதல் நடவடிக்கைகளைத் தவிர்த்து ஏனைய ஒத்துழைப்புக்களை இந்திய கடற்படை சிறிலங்கா கடற்படைக்கு அளித்து வருகின்றது என இந்தியாவின் சிறிலங்காவிற்கான முன்னாள் தூதுவரும், இந்திய-சிறிலங்கா உறவுகள் பற்றி தொடர்ந்து கண்காணித்து வருபவருமான ஜே. என். டிக்சிற் கூறியுள்ளார்.

கடற்பகுதியில் பொதுவான கண்காணிப்பு விவகாரங்கள் பற்றியும், சிறிலங்காவின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட தகவல்களைக் கொடுக்கும் முகமாகவும் இந்தியக் கடற்படை சிறிலங்கா கடற்படைக்கு உதவி வருகின்றது.

சிறிலங்கா - இந்தியக் கடற் பகுதிகளில் நடமாடும் கப்பல் மற்றும் படகுகளின் போக்கு வரத்துப் பற்றி பொதுவான தகவல்களை இந்திய கடற்படை சிறிலங்கா கடற்படைக்கு வழங்குவது வழக்கமான ஒன்று. அதேசமயம், சந்தேகத்திற்கிடமான நடமாட்டங்கள் தென்பட்டால் அது பற்றிய தகவல்களை இந்திய கடற்படையின் கிழக்கு மற்றும் தெற்குப் பிராந்தியப் படைப் பிரிவுகளும் சிறிலங்கா கடற்படைப் பிரிவும் பரிமாறிக் கொள்வதும் வழக்கமான ஒன்று.

இந்தத் தகவல்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழல் நிலவுவதாக சிறிலங்கா கடற்படை கருதினால் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

அதேசமயம் கடந்த சனிக்கிழமை புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தில் அப்படி நடந்ததா என்று என்னால் உறுதியாகக் கூற முடியாது.

அதேசமயம், சிறிலங்கா அரசு-புலிகள் சமாதான நடவடிக்கைகளில் இந்தியா இராஜாங்க ரீதியாகவோ, இராணுவ ரீதியாகவோ நேரடியாகத் தலையிடாது. கடந்த காலங்களில் குறிப்பாக, 1987-1991ஆம் ஆண்டுகளுக்கிடையிலான காலத்தில் சிறிலங்காவின் விவகாரத்தில் இந்தியா நேரடியாகத் தலையிட்டபோது கிடைத்த கசப்பான அனுபவங்களை இந்தியா இன்னமும் மறக்கவில்லை. இதனால், சிறிலங்காவின் விவகாரத்தில் மீண்டும் நேரடியாகத் தலையிட்டு தன்னை காயப்படுத்திக் கொள்ள இந்தியா தயாராக இல்லை என்று டிக்சிற் மேலும் கூறியுள்ளார்.

### சமாதான முய...

இது தொடர்பாக நோர்வேயின் சமாதானக் குழு ஒன்று விடுதலைப் புலிகளுடனும், சிறிலங்கா அரசுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இச்சமாதானக் குழு அடுத்த சில வாரங்களில் கொழும்பிற்கும், கிளிநொச்சிக்கும் பயணங்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, கடந்த சனிக்கிழமை சிறிலங்காக் கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்ட கப்பலில் இருந்த 12 போராளிகள் தொடர்பான விவகாரம் நிலைமைகளை மேலும் சிக்கலாக்குமென அரசியல் அவதானிகள் கருத்துக் கூறியுள்ளனர்.

### வெளிநாட்டு...

கம், உல்லாசப் பயணத்துறை, முதலீட்டுத்துறை, சிறிலங்கா தேயிலை விற்பனை, வெளிநாட்டு வேலை வாய்ப்புகளைத் தேடுதல் என்பவற்றை செயற்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### புலிகள்-படை...

தன் ஆகியோரும் கலந்து கொண்டார்கள். ஓமந்தை, வேப்பங்குளம், அரச முறிப்பு, சிதம்பரபுரம், நாம்பன் குளம் ஆகிய கிராமங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு இந்தக் கலந்துரையாடலின் முடிவில் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும், முதலில் நாளை மறுநாள் ஓமந்தை, வேப்பங்குளம் கிராமத்தில் மக்களை மீளக்குடியேற்றுவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச முறிப்புக் கிராமத்தில் எதிர்வரும் 25 ஆம் நாள் அன்று மக்களை மீளக்குடியேற்றுவதற்கு இணக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இந்தப் பகுதிகளிலுள்ள மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிளை எவ். எஸ். ரி. என்ற அமைப்பு அகற்றி வரும் அதே வேளை அப்பகுதிகளில் கண்ணிவெடி, மிதிவெடி தொடர்பாக விழிப்புணர்வுச் செயற்பாடுகளை யு.என்.டி.பி. என்ற அமைப்பு மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மீள் குடியமர்வுக்காகத் தெரிவான கிராமங்களைச் சேர்ந்த மக்களும் கலந்து கொண்டார்கள்

### இடைக்கால நிர்...

ருக்கிறார். கடிதப் பரிமாற்றம் மாத்திரம் போதுமானது அல்ல என்று அவர் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவுக்கடலில் அண்மையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக வினா எழுப்பிய போது போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அவதானிகளின் அறிக்கை கிடைக்கும் வரையும் இந்தச் சம்பவம் பற்றி எந்தக் கருத்தையும் வெளியிட முடியாது என அமைச்சர் கூறியிருக்கிறார்.

மற்றுமொரு கேள்விக்கு பதிலளிக்கையில் வடக்குக் கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது குறித்து உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் தகுந்த தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் என்றார்.

இந்த மாநாட்டில் இலங்கை பெற்றுள்ள நிதியுதவிக்கு எதிராக பல குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. அங்கு அறிவிக்கப்பட்டுள்ள 4.5 பில்லியன் டொலர் உதவி மொத் தத்தொகை அல்ல ஜப்பான் நான் காவது ஆண்டில் வழங்கவிருக்கும் உதவி இந்தத் தொகையில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. கிடைக் கப்பெறும் சகல உதவிகளும் கடன்கள் அல்ல என்றும் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்திருக்கிறார். அவற்றில் ஒருபகுதி நன்கொடை யாக வழங்கப்படுகிறது. கடன்கள் கூட இலங்கைக்கு மிகவும் சாதக மான நிபந்தனைகளுடன் குறைந்த வட்டி வீதத்தில் வழங்கப்படு கின்றன என்றும் அவர் கூறினார்.

### இனந்தெரியாதோ...

டித் தூக்கி சித்திரவதை செய்துள்ளனர். இவ்விசாரணை தொடர்பாக வெளியில் எவருக்கும் கூறக்கூடாதெனப் படையினர் எச்சரித்துள்ளனர்.

### படையினரின்...

யில், படைக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களுக்கும் புலிகளுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட் டுவதிலுள்ள குறைபாட்டைப் பயன் படுத்தி சமாதான விரோத சக்திகளே இச்செயல்களில் ஈடுபடுவதாக படைத்தரப்பினருக்குத் தெளிவாக வலியுறுத்தியுள்ளோம்.

மேலும் படைத் தரப்பினர் மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் சோதனைச் சாவடிகளை இயங்கச் செய்வது தொடர்பாக பிரஸ்தாபித்த போது இந்நடவடிக்கை ஒப்பந்தத்தை மீறும் செயல் என்றும், இது மக்கள் மத்தியில் மீண்டும் அச்சத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தும் என்றும் தெளிவாகத் தெரிவித்துள்ளோம்.

அத்துடன், மட்டக்களப்புப் பிரதேச - திருகோணமலை புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சத்தியராஜை விடுதலை செய்தாலேயே செங்கலடியில் புலிகளால் கைது செய்யப்பட்ட பொலிசார் இருவரையும் விடுதலை செய்ய முடியும் என்று இச்சந்திப்பில் கலந்து கொண்ட படைத் தரப்பிற்கு உறுதியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில், புலிகள் தரப்பில், மட்டு.- அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ், பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் இ. கௌசல்யன், பிரதேச நிர்வாகப் பொறுப்பாளர் றெஜினோல்ட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

படைத்தரப்பில் 23ஆவது படைப் பிரிவுக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பாலசூரிய, இப்படைப் பிரிவின் மட்டக்களப்பு மாவட்ட கட்டளை அதிகாரி கேணல் ராஜித டி சில்வா, கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க, மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லசந்த டி சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# யாழ். பலாலி விமானசேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையிலான தனியார் விமானசேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. மறு அறிவித்தல்வரை இச்சேவை நடைபெறமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

பலாலி விமானத்தளத்தில் தீயணைக்கும் நடவடிக்கை களுக்குத் தேவையான இரசாயனக் கலவைகள் மற்றும் உபகரணங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் வான் படையினர் இந்த அறிவுறுத்தலை விடுத்திருப்பதாகக் கூறப்படுகின்றது என்றும் நேற்று மாலையின் பின் இந்த விமானச் சேவைகள் வழமைக்குத் திரும்பும் என வான்படை அதிகாரி அஜித் விஜயசுந்தர நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார்.

# ஈ.பி.டி.பி. மற்றும் வரதர் அணி பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர். எல்.எவ். வரதர் அணி ஆகிய கட்சிகளின் முக்கியஸ்தர்களது பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இக்கட்சிகளின் முக்கியஸ்தர்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டு வருவதால் அவர்களிற்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, வெள்ளவத்தை சோதனைச் சாவடியில் சயனைற் அருந்திய இருவருடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் நால்வர் கொட்டாஞ்சேனையில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ளவர்களில் இருவர் பெண்கள் எனவும், அவர்கள் வசித்து வந்த வீடு பொலிசாரினால் மூடப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மூழ்கடிக்கப்பட்ட கப்பல் தொடர்பான விடயங்களை அரசாங்கம் மறைக்கிறதாம்

## சனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்த சனிக்கிழமை புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சிலவிடயங்களை அரசாங்கம் மூடிமறைக்க முயல்வதாக சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

இக்கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் குறித்து பொ. ஐ. முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் சனாதிபதி ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தி இருக்கின்றார். இதன் போது கப்பல் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து உண்மையான தகவலை தெரிவிப்பதில் அரசாங்கம் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிப்பதாக விசனம் வெளியிட்டுள்ள சனாதிபதி விடுதலைப்புலிகள் இந்தக் கப்பலில் ஆயுதங்களைக் கடத்தியமை கடற்படையினரால் தெளிவாகக் கண்டறியப்பட்டுள்ளது அதனை பாதுகாப்பு அமைச்சர் மறைத்து புலிகளைக் காப்பாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என்று கூறிய சனாதிபதி நாட்டின் இறையாண்மைக்கு ஆபத்து ஏற்படும் பட்சத்தில் அது தொடர்பாக அவசர நடவடிக்கை எடுக்க நான் உறுதிபூண்டுள்ளேன் என்றார்.

### சுழிபுரத்தில்...

நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த கண்காணிப்புக்குழுவினர் விடுதலைப்புலிகளின் அலுவலகத்தை சோதனையிட்டபோது யுத்தநிறுத்தத்தை மீறுகின்ற வகையில் எந்தத்தடயமும் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டனர்.

கடற்படையினரதும், பொலிசாரினதும் இந்நடவடிக்கை பாரிய யுத்த நிறுத்த மீறலென விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி கூறியுள்ளார்.

குறிப்பிட்ட புலிகளின் முகாமைச் சுற்றி இராணுவ மோட்டார் வண்டிப் பிரிவினர் தொடர்ச்சியாக சுற்றி வருகின்றனர். இதேவேளை, யாழ்ப்பாணத்தில் புதியசெம்மணிவீதி, வல்லிபுரக் குறிச்சி, அராலி மற்றும் வறணி போன்ற பகுதிகளிலும் படையினர் திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை நேற்று முன் தினம் மேற்கொண்டனர்.


## பயிற்சியாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்

டாக்டர். பொன்னம்பலம் ஞாபகார்த்த (துனியார்) மருத்துவமனை, கிளிநொச்சி.

**01. மருத்துவ ஆய்வுகூட நுண்நோக்காளருக்கான பயிற்சியாளர்**

தகைமை : க.பொ.த (சா/த) இல் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் விசேட சித்தியுடன் ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

க.பொ.த (உ/த) இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**02. மருந்தாளருக்கான பயிற்சியாளர்.**

தகைமை : க.பொ.த (சா/த) இல் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் விசேட சித்தியுடன் ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

க.பொ.த. (உ/த) இல் சிதியடைந்திருத்தல் வேண்டும்.

**03. பயிற்சித் தாதியர்**

தகைமை : க.பொ.த (சா/த) இல் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்கில் விசேட சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் 30-06-2003 ற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு

பணிப்பாளர்,
டாக்டர். பொன்னம்பலம் ஞாபகார்த்த,
(துனியார்) மருத்துவமனை,
கிளிநொச்சி.

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

முன்னர் விண்ணப்பித்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

நிர்வாகம்,
டாக்டர். பொன்னம்பலம் ஞாபகார்த்த
(துனியார்) மருத்துவமனை,
கிளிநொச்சி.

(சி-2067)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூன் மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.